**<u>In the Court of the Principal District Munsif, Padmanabhapuram.</u>**

O.S.No. 63/2023 தேதி- 25.02.2026
(PW1.) – சுனில்

**<u>குறுக்கு விசாரணை</u>**

1. வாதி எனக்கு எழுதிக் கொடுத்த அதிகார ஆவணத்தின் படி வாதிக்கு ஆதரவாக இவ்வழக்கில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணம் ரூ.100/- முத்திரைத் தாளில் தான் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதிகார ஆவணம் குறைந்தது ரூ.1,000/-முத்திரை தாளில் தான் ஏற்படுத்தப்பட வேண்டும் என்றாலும், ரூ.100/-க்கு குறைவாக முத்திரை தாளில் எழுதப்பட்டுள்ளதால் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

2. வா.சா.ஆ.1 ஆவணத்தில் வழக்கின் சங்கதியை பற்றி எனக்கு தெரியும் என்றாலும், அதன் அடிப்படையில் சாட்சியம் அளிக்க அதிகார வழங்கப்பட்டதாக எந்த குறிப்பும் இல்லை என்றால் சரிதான், ஆனால் எனக்கு வழக்கு விவரங்கள் தெரியும். இவ்வழக்கு பட்டிகை சொத்திற்கு அருகாமையில் 2வது பிரதிவாதியான சுரேஷ்குமாருக்கு சொந்தமான சொத்து ஏதும் இல்லை என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது.

3. 1வது பிரதிவாதியான சுதா என்பவருக்கு வாதியின் சொத்திற்கு அருகாமையில் சொத்து உள்ளது என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. 2வது பிரதிவாதியான சுரேஷ்குமார் 1வது பிரதிவாதியான சுதாவின் கணவர் என்றால் தெரியாது. 3வது பிரதிவாதியான ராஜு என்பவருக்கு வாதியின் சொத்திற்கு அருகாமையில் சொத்துக்கள் ஏதும் இல்லை என்றால் சரிதான். 2 மற்றும் 3வது பிரதிவாதிகளுக்கு வாதியின் சொத்தின் அருகாமையில் எவ்வித சொத்துக்களும் இல்லை என்றாலும், தேவையில்லாமல் தரப்பினராக இவ்வழக்கில் சேர்த்துள்ளேன் என்றால் சரியல்ல.

4. 1வது பிரதிவாதியான சுதாவிற்கு வாதியான ராகினியின் சொத்தின் எந்த திசையில் சொத்து அமைந்துள்ளது என்றால் தெரியாது. இவ்வழக்கின் வாதியின் சொத்தின் சர்வே எண்.133/2A ஆகும். மேற்சொன்ன சொத்தை வாதி எப்போது கிரயம்

வாங்கினார் என்றால் 03.03.2022 ல் விலைக்கு வாங்கினார். 1வது பிரதிவாதி 2008 ஆம் ஆண்டிலே அவருக்கு உரிமைப்பட்ட சொத்தை விலைக்கு வாங்கினார் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது.

5. 1வது பிரதிவாதிக்கு விற்பனை செய்த கணேசன் ஆசாரி என்பவர் 3 வது பிரதிவாதியான ராஜுக்கும் ஒரு பகுதியை விற்பனை செய்துள்ளார் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. மீதமுள்ள ஒரு பகுதியை கணேசன் ஆசாரி அவருடைய மகளுக்கு ஒரு செட்டில்மேன்ட் ஆவணம் மூலம் எழுதிக் கொடுத்துள்ளார் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. 1வது பிரதிவாதிக்கு விற்பனை செய்த கணேசன் ஆசாரி அந்த ஆவணத்தில் 15 அடி வழிப்பாதை 1வது பிரதிவாதிக்கு உரிமைப்பட்டதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரியல்ல, அங்கு வழிப்பாதை ஏதும் இல்லை.

6. மேற்சொன்ன வழிப்பாதை வாதியின் சொத்திற்கும், 1வது பிரதிவாதியின் சொத்திற்கும் வடக்கு பக்கம் அமைந்துள்ளது என்றால் சரியல்ல, வழிப்பாதை ஏதும் இல்லை, நடந்து செல்ல பாதை அவகாசம் வழங்கியுள்ளோம். 1வது பிரதிவாதியின் பெயரில் உள்ள கிரய ஆவணத்திற்கு முன்பே இவ்வழக்கில் சொல்லப்பட்டுள்ள வழிப்பாதை உள்ளது என்றாலும், நாங்கள் தான் விட்டுக் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல.

7. 1 மற்றும் 2 பிரதிவாதிகள் இவ்வழக்கு பட்டிகை சொத்தின் அருகாமையில் வசிக்கவில்லை என்றால் சரிதான், சுற்றியுள்ள பகுதிகள் அனைத்தும் காலிமனையாக தான் உள்ளது. வழக்கு சொத்திற்கு அருகாமையில் 1மற்றும் 2 பிரதிவாதிகள் இல்லாததால் காரணத்தினால், அவர்களுக்கு உரிமைப்பட்ட வழிப்பாதை நாங்கள் அபகரித்து வைத்துள்ளோம் என்றால் சரியல்ல, அவர்களுடைய எல்கையில் காம்பவுண்ட் சுவர் அமைத்துள்ளார்கள்.

8. வழக்கில் 1வது பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிருரையில் உள்ள சங்கதிகளை நானோ, வாதியோ படித்து பார்த்துள்ளோமா, அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் இல்லை. எதிர் வாதுரையில் பத்மனாபபுரம், சார் ஆட்சியரால் பிறப்பிக்கப்பட்ட இரண்டு உத்தரவுகளை தாக்கல் செய்துள்ளார்

என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. 1 வது பிரதிவாதி பத்மனாபபுரம், சார் ஆட்சியர் அலுவலகத்தில் வாதியின் மீது பாதை பிரச்சனை சம்மந்தமாக புகார் அளித்திருந்தார் என்றால் சரிதான்.

9. பத்மனாபபுரம், சார் ஆட்சியரால் வழக்கு பட்டிகை சொத்தின் வடக்கு பக்கம் உள்ள பாதையை அடைத்து வைத்துள்ளதால் வாதியின் சொத்திற்கு வழங்கப்பட்ட உட்பிரிவை ரத்து செய்யக் கோரி 1 வது பிரதிவாதி கொடுத்த புகாரின் அடிப்படையில் முதலாவது உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்றால் சரியல்ல. மேற்சொன்ன புகாரின் அடிப்படையில் வாதி பத்மனாபபுரம், சார் ஆட்சியர் அலுவலகத்தில் ஆஜராகி ஒரு எழுத்து பூர்வமான வாக்குமூலம் எழுதிக் கொடுத்துள்ளார் என்றால் விசாரணைக்கு சென்ற விவரம் தெரியும், எழுத்து மூலமாக வாக்குமூலம் எழுதிக் கொடுத்தாரா என்று எனக்கு தெரியாது.

10. அந்த வாக்குமூலத்தில் பாதை போக்குவரத்து தொடர்பான எந்தவித இடையூறும் செய்ய மாட்டேன் என்று எழுத்து பூர்வமாக எழுதிக் கொடுத்ததன் அடிப்படையில் மேற்சொன்ன புகார் மனு முடிக்கப்பட்டது என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. அதன் பின்பு வாதி அந்த வழிப்பாதையை அடைத்ததால் மீண்டும் 1 மற்றும் 2 பிரதிவாதிகள் பத்மனாபபுரம் சார் ஆட்சியரிடம் புகார் மனு கொடுத்து அந்த புகார் மனுவின் விசாரணைக்கும் வாதி ஆஜரானார் என்றால் சரிதான்.

11. அந்த பாதையை மறைத்து ஆஸ்பெட்டாஸ் ஷீட் அமைக்கப்பட்ட கார் நிறுத்தும் பகுதியை வாதி மாற்றிக் கொடுக்க வேண்டுமென்று மேற்படி சார் ஆட்சியரால் இரண்டாவது உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. அந்த உத்தரவில் மேற்சொன்ன உத்தரவை வாதி தவறும்பட்சத்தில் காவல் துறையினர் உதவியுடன் மேற்சொன்ன ஆக்கிரமிப்பை அகற்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டு இருந்தது என்றால் தெரியாது.

12. மேற்சொன்ன உத்தரவு தற்போது வரை நிலுவையில் தான் உள்ளது என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. மேற்சொன்ன பத்மனாபபுரம், சார் ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற விசாரணை மற்றும் உத்தரவுகளை பற்றி இவ்வழக்கின் வாதுரையிலோ, முதல் விசாரணையிலோ சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல,

சொல்லியுள்ளோம். மேற்சொன்ன விவரங்களை வாதுரையிலோ, முதல் விசாரணையிலோ சொல்லாமல், உண்மையை மறைத்து இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல.

13. பத்மனாபபுரம், சார் ஆட்சியர் அலுவலகத்தில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு மீது எந்த ஒரு மேல்முறையீட்டிற்கும் வாதியால் மேற்கொள்ளப்படவில்லை என்றால் சரிதான். மேற்படி உத்தரவு மீது மேல்முறையீடு செய்யாமல், இவ்வழக்கை தாக்கல் செய்ய இயலாது என்றால் சரியல்ல. வாதி உண்மைகளை மறைத்தும், எந்தவித வழக்கு மூல காரணமும் இல்லாமல், முன் ஆவணங்களின் படி உள்ள பாதையை அபகரிக்க வேண்டி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளபடியால் பத்மனாபபுரம் சார் ஆட்சியரின் உத்தரவுகள் நிலுவையில் உள்ளபடியாலும், இவ்வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றாலும், வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.